**கவனிக்க.**- *11.10.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1833 - 2013 ඔක්තෝබර් මස 17 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.10.17

*1833 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1426 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1430 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2013, நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டி சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1* விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

*1.2* சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

*1.3* சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1* நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

*2.2* அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

*2.3* அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1* நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

*3.1.1* சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

*3.1.2* சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

*3.1.3* சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

*3.1.4* அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

*3.1.5* அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

*3.1.6* இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

*3.1.7* அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

*3.1.8* தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1* நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

*4.2* நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

*4.3* அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

*4.4* ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1* ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1* எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

*6.2* விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

*6.3* விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

*6.4* விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

*6.5* விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1* தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## அரசாங்க சேவை ஆணைக்குழு

தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு

**தொழில் திணைக்களத்தில் சட்ட அலுவலர்கள்**
(நிறைவேற்று சேவை தரம் III) பதவிக்கு திறந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்பு

தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சுக்குரிய தொழில் திணைக்களத்தில் சட்ட அலுவலர்கள் பதவிக்கு 7 பேரை சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரும் இறுதித் தினமான 2013.11.15 ஆந் திகதி இதன் 2 ஆவது பந்தியில் குறிப்பிட்டுள்ள தகைமைகள் உள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை.**- அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரர்களிடையே அரச சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையினால் நடாத்தப்படும் அமைப்பு முறையான நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளினால் வெற்றிட எண்ணிக்கைகளுக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

1.1 இப்பதவிக்கு நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளைக்கு ஏற்ப தீர்மானிக்கப்படும்.

1.2 இங்கு அரச சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அறிவித்தலில் 6 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கும் நடைமுறைக்கு அமைவாக அமைப்பு முறை நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

2. **தகைமைகள் :-**

2.1 கல்வி/தொழில் தகைமைகள் :

(i) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சட்டம் தொடர்பான பட்டமொன்றினைப் பெற்றிருத்தல் ;
அல்லது

(ii) உயர் நீதிமன்ற சட்டத்தரணியொருவராகச் சத்தியப் பிரமாணம் செய்திருத்தல்.

2.2 அனுபவங்கள் :

(i) உயர் நீதிமன்ற சட்டத்தரணியொருவர் என்ற வகையில் சத்தியப்பிரமாணம் செய்த பின்னர், சட்டத்தரணியாக 3 வருடங்களுக்கு குறையாத தொழில் ரீதியான அனுபவத்தினைப் பெற்றிருத்தல்.

2.3 உடற் தகுதி :

(i) சகல பரீட்சார்த்திகளும் இலங்கையின் எப்பிரதேசத் திலும் சேவையாற்றுவதற்கும் கடமைகளை நிறை வேற்றுவதற்கும் உரிய வகையில் உடல் மற்றும் உள தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

2.4 ஏனையவை :

(i) இலங்கைப் பிரசையொருவராக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தை கொண்டவ ராக இருத்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பத்தினைக் கோரும் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தினத்தன்று பதவிக்குச் சேர்த்துக் கொள்வதற்காக சகல தகைமைகளையும் சகல முறைகளிலும் முழுமையாகப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

3. **சேவையாற்றுவது தொடர்பான பொது நிபந்தனைகளும் மற்றும் சேவை நிபந்தனைகளும் :**

(i) இப்பதவி ஓய்வூதியத்துடன் கூடிய நிரந்தரமான பதவியாகும். விதவைகள்/அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்தப்பட வேண்டும் ;

(ii) இப்பதவி 3 ஆண்டுகால தகுதிகாண் காலத்திற்குட்பட்ட தாகும் ;

(iii) நியமனத் திகதியிலிருந்து 3 ஆண்டுகள் முடிவடைவதற்கு முன், முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைய வேண்டும் ;

(iv) அரச நிர்வாக சுற்றுநிருபம் இலக்கம் 07/2007 இற்கு ஏற்பவும் அதற்கு மேலதிகமாக வெளியிடப்படும் சுற்றுநிருபத்திற்கு ஏற்பவும் பதவியில் சேர்ந்து 5 ஆண்டு காலத்திற்குள் சேவையில் சேர்க்கப்பட்ட மொழிக்கு மேலதிகமாக மற்ற அரச மொழி தொடர்பாக உரிய தேர்ச்சியினைப் பெற்றுக் கொள்வதுடன் அரச மொழி அல்லாத மொழி மூலம் சேவையில் சேர்ந்த அலுவலர்களினால் தகுதிகாண் காலத்திற்குள் குறிப்பிட்ட அரச மொழியில் தேர்ச்சிபெற வேண்டும்.

(v) அரச சேவை நியமனத்தை நிர்வாகம் செய்யும் பொது நிபந்தனைகளுக்கும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு சட்டதிட்டங்கள், நிதிப் பிரமாணங்கள், தாபனக் கோவையின் ஏற்பாடுகளும் மற்றும் அவற்றிற்கு செய்யப்படும் திருத்தங்களும் திணைக்களத்தின் ஏனைய கட்டளைகள், 2013.02.15 ஆந் திகதிய அரசாங்க சேவை ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு முறைக்கு இயற்றப்பட்ட நியதி நிபந்தனைகளுக்கும் ஆட்சேர்ப்பு முறைக்கு பின்னர் செய்யப்படும் திருத்தங்களுக்கும் உட்பட தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தியொருவர் சேவையில் III ஆம் வகுப்பிற்கு நியமிக்கப்படுவார்.

(vi) தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் இலங்கையினுள் குறிப்பிடப்படும் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்ற வேண்டும்.

4. **வயதெல்லை.**- பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று வயது 21 இற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்கு ரூபா 22,935 - 10 X 645 - 8 X 790 - 17 X 1,050 - ரூபா 53,555 மாதச் சம்பள அளவு உரித்தாகும். (2006.04.25 ஆந் திகதிய 06/ 2006 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றுநிருபத்திற்கமைய SL-I-2006 சம்பள அளவு)

6. அமைப்பு முறையான நேர்முகப் பரீட்சை தொடர்பாக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கும் நடைமுறை அடிப்படையாகக் கொள்ளப்படும்.

| | விடயங்கள் | | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | மேலதிக கல்வித் தகைமைகள் | | 20 |
| | * ஏற்றுக்கொள்ளக்கூடிய பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட சட்டம் தொடர்பான பட்டம்- | | |
| | * முதலாம் வகுப்பில் சித்தி யடைந்தால் | 20 | |
| | * 2 ஆம் வகுப்பில் மேல்நிலை சித்தியடைந்தால் | 15 | |
| | * 2 ஆம் வகுப்பில் கீழ்நிலை சித்தியடைந்தால் | 10 | |
| | * சட்டக் கல்லூரியில் இறுதி யாண்டில் முதலாம் வகுப்பில் சித்தியடைந்தால் | 15 | |
| | * சட்டக் கல்லூரியில் இறுதி யாண்டில் இரண்டாம் வகுப்பில் சித்தியடைந்தால் (அதிகூடிய தகைமை களுக்கு மட்டும் புள்ளிகள் வழங்கப்படும். பட்டம் அல்லது சட்டக் கல்லூரி யின் தகைமைகளில் ஒன் றிற்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்.) | 10 | |
| 2 | மேலதிக தொழில் தகைமைகள் | | 15 |
| | * ஏற்றுக்கொள்ளக்கூடிய நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட உரிய துறை தொடர்பாக ஒரு வருடத் திற்கு குறையாத பட்டப் பின் படிப்பு டிப்புளோமா அல்லது சட்டப்பின் படிப்பு டிப்புளோமா கற்கைநெறி தொடர்பாக (ஒரு டிப்ளோமா கற்கை நெறியொன்றிற்கு 5 புள்ளிகள் வீதம் வழங்கப் படும்.) | | |
| | * ஏற்றுக்கொள்ளக்கூடிய நிறு வனமொன்றினால் வழங் கப்பட்ட உரிய துறை தொடர் பாக 06 மாதத்திற்கு குறை யாத டிப்புளோமா கற்கை நெறியொன்று தொடர்பாக (ஒரு டிப்புளோமா கற்கை நெறியொன்றிற்கு 3 புள்ளி கள் வீதம் வழங்கப்படும்.) | | |

| | விடயங்கள் | | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| | * ஏற்றுக்கொள்ளக்கூடிய நிறு வனமொன்றினால் வழங்கப்பட்ட உரிய துறை தொடர்பாக 03 மாதத்திற்கு குறையாத சான்றிதழ் கற்கை நெறி தொடர்பாக (ஒரு கற்கை நெறிக்கு 02 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.) | | |
| 3 | மேலதிக அனுபவங்கள் | | 30 |
| | * சட்டத்தரணியொருவராக அரச சேவையில் அல்லது தனியார் துறையிலான அனுபவத்திற்கு ஒரு வரு டத்திற்கு 05 புள்ளிகள் வீதம் அதிகூடிய புள்ளி களாக 30 (அடிப்படை தகைமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு தேவைப் படும் சட்டத்தரணியொரு வராக செயற்பட்ட 3 வருட சேவைக்காலம் தவிர்ந்த) (20 வருடத்திற்கு குறையாத சேவைக்காலத்தினை பூரணப்படுத்தியுள்ள சட்டத் தரணி ஒருவருடைய அல்லது நீதிபதியொரு வரிடமிருந்து பெற்ற சான்றிதழ் மூலம் மேலதிக அனுபவங்களை உறுதிப் படுத்த வேண்டும்). | | |
| 4 | ஆங்கில மொழித் தேர்ச்சி | | 15 |
| | * ஆங்கில மொழி மூலம் கற்கப்பட்ட பின்படிப்பு/ பட்டம்/சட்டப்பின் படிப்பு/ சட்ட பட்டம் (உரிய பரீட் சைக்கான வினாத்தாள்கள் சகலவற்றிற்கும் ஆங்கில மொழி மூலம் விடையளிக் கப்பட்டிருக்க வேண்டும்). | 15 | |
| | * பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் ஏற் றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது அரசினால் ஏற்றுக்கொள் ளப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவன மொன்றில் ஆங்கில மொழி தொடர்பான டிப்புளோமா கற்கை நெறி யொன்றுக்காக | 10 | |

| | விடயங்கள் | | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| | * பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவன மொன்றில் ஆங்கில மொழி தொடர்பான சான்றிதழ் கற்கை நெறியொன்றுக்காக | 05 | |
| 5 | தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு | | 15 |
| | * பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டமொன்று தொடர்பாக தகவல் தொழில்நுட்பம் பிரதான பாடமொன்றாக கற்றிருப்பது தொடர்பாக | 15 | |
| | * அரசினால் ஏற்றுக்கொள் ளப்பட்ட நிறுவனமொன் றில் 06 மாதத்திற்கு குறை யாத தகவல் தொழில் நுட்பம் தொடர்பான டிப்புளோமா கற்கைநெறி யின் பொருட்டு | 10 | |
| | * அரசினால் ஏற்றுக்கொள் ளப்பட்ட 03 மாதத்திற்குக் குறையாத தகவல் தொழில் நுட்பம் தொடர்பாக சான்றிதழ்கள் கற்கைநெறி யொன்றுக்காக | 05 | |
| 6 | நேர்முகப் பரீட்சையின்போது காண்பிக்கும் திறமைக்கு | | 05 |
| | மொத்தப் புள்ளிகள் | | 100 |

*பரீட்சார்த்திகளில் ஒரு நபருக்கும் கூடுதலான எண்ணிக்கையினர் ஒரே மாதிரியான புள்ளிகளைப் பெற்றிருப்பின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் பொருத்தமான முடிவினை எடுப்பது அரச சேவை ஆணைக்குழுவினால் செய்யப்படுவதுடன் அவை இறுதியான முடிவாக இருக்கும்.

**7. பரீட்சார்த்திகளின் அடையாளங்கள் :**

7.1 சகல வகையிலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பரீட்சார்த்திகள் மாத்திரம் அமைப்பு முறையான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

7.2 நேர்முகப் பரீட்சையின்போது எல்லாச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளும் உரிய முறையில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

7.3 நேர்முகப் பரீட்சையின்போது பரீட்சார்த்திகளினால் தமது அடையாளங்களை உறுதிப்படுத்துவதன் பொருட்டு கீழ்க்குறிப்பிட்டுள்ள அடையாள அட்டைகளில் ஒன்றினைச் சமர்ப்பிக்க வேண்டும் :-

(1) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
(3) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

**8. விண்ணப்பிக்கும் முறை :**

8.1 விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலிலுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப இருப்பதுடன் ஏ4 அளவி லான கடதாசியில் விண்ணப்பப்படிவத்தில் 1 தொடக்கம் 9 வரையிலுள்ள தலைப்புக்கள் முதலாவது பக்கத்திலும் 11 தொடக்கம் 14 வரையுள்ளவை இரண்டாவது பக்கத்திலும் அமையும் வகையில் தயாரித்து, தமது சொந்தக் கையெழுத் தினால் தெளிவாக நிரப்பப்பட வேண்டும். மாதிரி விண்ணப் பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத விண்ணப்பப் படிவங்கள் மற்றும் முழுமையாகப் பூரணப்படுத்தாததும் விபரங்களை உரிய முறையில் குறிப்பிடாத விண்ணப்பப் படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப் படிவத்தின் போட்டோ பிரதியொன்றினை உங்கள் வசம் வைத்திருப்பது நன்மை பயக்கும்)

8.2 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பதிவுத் தபாலில் 2013.11.15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில், ''கொழும்பு 5, தொழில் திணைக்களம், தொழில் ஆணையாளர் நாயகம்'' இற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை வைக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''தொழில் திணைக்களத்தின் சட்ட அலுவலர் பதவிக்கான திறந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்பு 2013'' எனக் குறிப்பிடப்பட வேண்டும். அத்தினத்திற்குப் பின்பு கிடைக்கும் எந்தவொரு விண்ணப்பப்படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. தபாலில் அனுப்பியபோது தொலைந்து போவது மற்றும் தாமதம் தொடர்பாக எவ்வித முறைப்பாடும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

8.3 விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம், அரசாங்க பாடசாலை அதிபரினால்/ சமாதான நீதவானி னால்/ சத்தியப்பிரமாண ஆணையாளரினால்/ சட்டத்தரணி யினால்/ பிரசித்த நொத்தாரிசினால்/ முப்படையின் அதிகாரமுள்ள அலுவலரினால்/ பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்படும் பதவி வகிக்கும் அலுவலரினால் அல்லது மாதமொன்றிற்கு ரூபா 22,935 இற்கு அதிகமான ஒன்றிணைந்த சம்பளத்தினைப் பெறும் அரசில் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலரினால் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

**9. பொய்யான தகவல்களைச் சமர்ப்பித்தல்.-** பரீட்சார்த்தி யொருவர் தனது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள ஏதாவது விபரங்கள் பொய்யானவை எனவும் அல்லது தவறானவை எனவும் சேர்த்துக்கொள்வதற்கு முன்னர் கண்டறியப்பட்டால் அவருடைய பரீட்சார்த்தி தன்மை நீக்கப்படும். அதுபோன்று பொய்யான அல்லது தவறான விபரங்கள் தொடர்பாக சேவையில் சேர்க்கப்பட்ட பின்னர் கண்டறியப்பட்டால் அதற்குரிய சட்ட நடவடிக்கையின்கீழ் அவரை அரச சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

* ஏதாவது வெற்றிட எண்ணிக்கை அல்லது சகல வெற்றிடங்களும் நிரப்பப்படாமை மற்றும் ஒழுங்குவிதிப் பிரமாணங்களில்

குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பாக தீர்மானம் எடுப்பது தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.

* இவ்வறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையே ஏதாவது முரண்பாடுகள் காணப்படுமாயின் அப்போது சிங்கள மொழியிலான வாக்கியங்கள் மேலோங்கி நிற்கும்.

அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

டபிள்யூ. ஜே. எல். யூ. விஜயவீர,
செயலாளர்,
தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு.

தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு,
தொழிற் செயலகம்,
நாராஹேன்பிட்டி,
கொழும்பு 05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**தொழில் திணைக்களம்**

சட்ட அலுவலர்கள் பதவிக்கு (பதவிநிலை தரம் III)
திறந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்பு - 2013

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர், முதலெழுத்துக்கள் இறுதியில் அமையும் வகையில் :----.
(ஆங்கில தனித்தனி எழுத்துக்களில்), உ-ம் : SILVA, A.B.
1.2 முழுப்பெயர் (ஆங்கில தனித்தனி எழுத்துக்களில்) :----.
1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில தனித்தனி எழுத்துக்களில்) :----.
2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
2.3 அலுவலக முகவரி (ஆங்கில தனித்தனி எழுத்துக்களில்) :----.

3. பெண்/ஆண் : ☐
(ஆண்-0, பெண்-1)
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

4. விவாகமானவரா/விவாகமாகாதவரா ?
விவாகமாகாதவர்-1 ☐
விவாகமானவர்-2
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

6. 6.1 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

6.2 விண்ணப்பப்படிவம் கோரும் இறுதித் தினத்தன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

7. தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

8. 8.1 சட்டத்துறையில் பட்டம் பெற்ற வருடம் :----.
8.2 பல்கலைக்கழகம் :----.
8.3 சித்தி :----.
8.4 மேலதிக கல்வித் தகைமைகள் :----.

9. 9.1 உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த ஆண்டு :----.
9.2 விண்ணப்பப்படிவம் கோரும் தினத்தன்று சட்டத்தரணியொருவராக அனுபவங்கள் :----.

10. 10.1 ஆங்கில மொழித் தேர்ச்சி :----.
10.2 தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு :----.

11. நீர் ஏதாவது குற்ற நடவடிக்கைகளுக்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக காணப்பட்டீரா ? :----.

அவ்வாறாயின் அது தொடர்பான விபரங்கள் :----.

12. நீர் இதற்கு முன் அரச சேவையிலிருந்தபோது முடிவுறுத்தப்பட்டிருந்ததா ? அவ்வாறாயின் அது தொடர்பான விபரங்களும் சேவை முடிவுறுத்தலுக்கான காரணங்களும் :----.

13. விண்ணப்பதாரருடைய உறுதியுரை :

என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை மற்றும் சரியானவை எனவும் உறுதியளிக்கின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் பொய்யானவையாக அல்லது பிழையானவை என நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் கண்டறியப்பட்டால் அக்காரணத்திற்காக நான் இந்தப் பதவிக்குப் பொருத்தமற்றவனாகவும் இந்தப் பதவிக்கு நான் நியமிக்கப்பட்ட பின்னர் அத்தவறு கண்டறியப்பட்டால் எந்தவொரு நட்டஈடும் வழங்கப்படாது நான் சேவை நீக்கத்திற்குட்படுவேன் என அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

14. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தினை உறுதி செய்தல் :**
(வர்த்தமானி அறிவித்தலில் பந்தி 8 இல் 8.3 இன்படி இருக்க வேண்டும்) :

இவ்விண்ணப்பப்படிவத்தினைச் சமர்ப்பிக்கும் ...................... ...................................................... (முழுப்பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும் அவருடைய கையெழுத்தினை ............................................... ஆந் திகதி எனது முன்னிலையில் வைத்தார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தினை உறுதிசெய்பவருடைய கையொப்பம்.

திகதி :----.

கையொப்பத்தினை உறுதிசெய்யும் அலுவலருடைய முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(உத்தியோக இலச்சினையினால் உறுதிப்படுத்த வேண்டும்.)

10-607

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**சுகாதார அமைச்சு**

உளவியல் நிபுணர் (Psychologist) (களத்தில்/அலுவலகத்தில் பணியாற்றுபவர்கள் பிரிவு 01 சேவை வகை) பதவிக்கு போட்டிப் பரீட்சை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல்

சுகாதார அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் வைத்தியசாலைகளுக்கு உளவியல் நிபுணர் பதவியின் (Psychologist) தரம் II இல் 24 வெற்றிடங்களின் பொருட்டு ஆட்சேர்ப்பு செய்வதற்கு பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு நடைமுறை**.- இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து அமைச்சு செயலாளரினால் அல்லது அமைச்சு செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் நடத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் அதிக புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள், அவர்களது உடற்றகுதி மற்றும் தகைமைகள் ஒரு நேர்முகப் பரீட்சையினூடாக பரீட்சிக்கப்பட்ட பின்னர் இப்பதவிக்காக நியமிக்கப்படுவார்கள்.

2. **தேவைப்பட்டுள்ள தகைமைகள் :**

(I) கல்வித் தகைமைகள்/தொழில்சார் தகைமைகள் :

கல்வித் தகைமைகள்.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட உளவியல் சம்பந்தமான விசேட பட்டம் மற்றும் உளவியல் தொடர்பான பட்டப்பின் பட்டம் பெற்றிருத்தல்.

அத்துடன்

* க.பொ.த. (சா.த) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல்

அத்துடன்

தொழில்சார் தகைமைகள் :

* அரசினால் அங்கீகரிக்கப்பட்ட வைத்திய நிறுவனம் ஒன்றில் உளவியல் சம்பந்தமாக நோயாளிகளுக்கு சிகிச்சையளித்தல் தொடர்பில் ஆகக் குறைந்தது 02 வருட பயிற்சி அனுபவம் பெற்றிருத்தல்.

அத்துடன்

* உளவியல் நிபுணர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் ஆகக் குறைந்தது 06 மாதம் பயிற்சி பெற்றிருத்தல்.

(II) உடற்றகுதி.- இலங்கையின் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமையை நிறைவேற்றுவதற்கும் தேவையான உடல் ரீதியான, உளரீதியான தகுதியினைக் கொண்டிருத்தல்

(III) ஏனையவை :

* இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
* விண்ணப்பதாரி நற்பண்புடையவராக இருத்தல் வேண்டும்.
* விண்ணப்பம் கோரப்படும் முடிவுத் திகதியன்று இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக வேண்டப்பட்ட அனைத்து தகைமைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

3. **தொழில் நியதிகளும், சேவை நிபந்தனைகளும்**.- (i) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியம் உடையதுமாகும். விதவைகள்/தபுதாரன், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு வேதனத்தின் குறிப்பிட்ட சதவீதத்தை பங்களிப்பு செய்தல் வேண்டும்.

(ii) இப்பதவி 03 வருட காலத்திற்கு தகுதிகாண் நிலைக்கு உட்படுத்தப்படும்.

(iii) 07/2007 ஆம் இலக்க பொ.நி.சுற்றறிக்கைக்கு அமைவாகவும், அதற்கு பிரதியீடான சுற்றறிக்கைகளுக்கு அமைவாகவும் பதவியில் சேர்க்கப்பட்டு 05 வருட காலத்தினுள் சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட பாஷைக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழியில் பதவியுடன் தொடர்புடையதாக குறித்த தேர்ச்சியினைப் பெறுதல் வேண்டும்.

(iv) பதவியில் இணைத்துக் கொள்ளப்பட்டு 03 வருடத்தினுள் முதலாவது வினைத்திறன் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(v) இந்த நியமனம் அரச சேவை ஆணைக்குழுவின் நடைமுறைக் கோவை விதிகள், நிதிப்பிரமாணம் மற்றும் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் என்பவற்றினால் கையாளப்படும்.

4. **வயது**.- விண்ணப்ப முடிவு திகதியன்று 21 வயதிற்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்கு ரூபா 17,680-10x320 - 11x365-15x450 - ரூபா 31,645 [MN. 06 - 2006A]

6. எழுத்துப் பரீட்சை பின்வரும் விடயங்களின் பிரகாரம் நடத்தப்படும் :-

| வினாத்தாள் | பாடத்திட்டம் | காலம் | பெறக்கூடிய புள்ளிகள் | பெற வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1. நுண்ணறிவுப் பரீட்சை | சொற்கள், இலக்கங்கள் மற்றும் படங்களில் காட்டப்பட்டுள்ள சிக்கல்களுக்கு பரீட்சார்த்தி களினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் மற்றும் பதில்களினூடாக அப்பிரச்சினைகள் தொடர் பில் புரிந்துணர்வு, பெருமளவிலான எண்ணிக் கைகளை கணிப்பீடு செய்தல் மற்றும் நேரத்துக் கும், அவகாசத்திற்குமிடையிலான கூட்டுத் தொடர்பினை புரிந்துகொள்ளுதல் தொடர்பில் பரீட்சார்த்தியின் ஆற்றல் பரீட்சிக்கப்படும். | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40% |
| 2. பொது அறிவு | மனநோய், உளவியல் சம்பந்தமான நோய் களுக்கு சிகிச்சையளித்தல் தொடர்பில் இவ் வினாத்தாளினூடாகப் பரீட்சிக்கப்படும். | 03 மணித்தியாலம் | 100 | 40% |

*ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 500 பிரதான அஞ்சல் அலுவலகம் கொழும்பு 10 இற்கு செலுத்தப்படக் கூடியவாறாக செயலாளர், சுகாதார அமைச்சு சுவசிறிபாய 385, வணக்கத்திற்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை கொழும்பு 10 என்னும் முகவரிக்கு காசுக் கட்டளையாக செலுத்தல் வேண்டும். எக்காரணம் கொண்டும் பரீட்சைக்கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது.

7. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**.- இப்பதவிக்காக வேண்டப்பட்ட சகல தகைமைகளையும் பூர்த்தி செய்து விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் பரீட்சார்த்திகள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். எழுத்துப் பரீட்சையின்போது ஒவ்வொருவரும் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு பின்வரும் அடையாள ஆவணம் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை,
(ii) செல்லுபடியான கடவுச் சீட்டு.

8. (அ) விண்ணப்பங்கள் 2013.09.15 ஆந் திகதி அன்று அல்லது அத்திகதிக்கு முன்னர், பின்வரும் முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அத்திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் :-

செயலாளர்,
(பணிப்பாளர் (நிர்வாகம்) பிரிவு 06),
சுகாதார அமைச்சு,
இல. 385, வண. பத்தேகம விமலவன்ஷ தேரோ மாவத்தை,
கொழும்பு 10.

(ஆ) சமர்ப்பிக்கப்படவேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரிப்படிவம் ஒன்று இவ்அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தினை ஏ 4 அளவுத் தாளில் முன் பக்கத்தில் இல்க்கம் 01 இலிருந்து 08 வரையான விடயங்களையும் 02 ஆவது பக்கத்தில் இலக்கம் 09 இற்குரிய விடயங்களும் ஏனைய விடயங்களும் உள்ளடக்கக் கூடியதாக தயாரிக்கப்பட்டு தமது சொந்தக் கையெழுத்தினால் விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் உளவியல் நிபுணர் பதவிக்கான விண்ணப்பப் படிவம் எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரச பாடசாலை ஒன்றின் அதிபர்/சமாதான நீதவான் /சத்திய பிரமாணம் எடுத்த ஆணையாளர் ஒருவர்/சட்டத்தரணி /பிரசித்த நொத்தாரிஸ்/ஆயுதப் படைகளின் கட்டளையிடும் அதிகாரி/பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட பதவி ஒன்றினைக் கொண்டுள்ள உத்தியோகத்தர் அல்லது அரசாங்க சேவையில் நிரந்தர பதவியினைக் கொண்டுள்ளவரும் வருடாந்தம் 273,060/- அல்லது அதற்கு மேற்பட்ட சம்பளத்தினைப் பெறுபவருமான ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(உ) தற்போது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை தாம் பணிபுரியும் திணைக்களத்தின் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஊ) இதனுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தின் மாதிரிக்கு அமைவாக இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் விண்ணப்பங்கள் காணாமற் போதல் அல்லது தாமதமாதல் பற்றிய எவ்வித முறைப்பாடும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

9. **பிழையான தகவல்களை வழங்குதல்**.- உங்களால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏதேனும் பிழையானது அல்லது தவறானது என பரீட்சைக்கு முன்னதாக கண்டுபிடிக்கப்படுமிடத்து உங்களது பரீட்சை தகைமையானது இழக்கப்பட வேண்டி நேரிடும். நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து அதற்கான செயல் நடவடிக்கைகளுக்கு அமைவாக சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இந்த வர்த்தமானி அறிவித்தல் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய 03 மொழிகளிலும் பிரசுரிக்கப்படுவதுடன், இவற்றுள் ஏதாவது முரண்பாடுகள் காணப்படுமிடத்து சிங்கள மொழியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலே சரியானது என கொள்ளப்பட வேண்டும்.

இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள் எழுந்தால் சுகாதார செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

(வைத்திய கலாநிதி) வை. டி. நிஹால் ஜயதிலக,
செயலாளர்.

சுகாதார அமைச்சு,
கொழும்பு 10,
2013, செத்தெம்பர் 21.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார அமைச்சின் உளவியல் நிபுணர் (Psychologist) பதவிக்கு போட்டிப் பரீட்சை அடிப்படையில் ஆட்சேர்த்தல்**

வசிக்கும் மாவட்டம் : ☐ மொழி மூலம் ☐
(சிங்களம் -01/தமிழ் -02/ஆங்கிலம் - 03)
(கூட்டிற்குள் உரிய இலக்கத்தை இடுக.)

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
உதா: Mr./Mrs./Miss. (SILVA A. B.)

1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில் /தமிழில்) :----.

2. 2.1 முகவரி (தனிப்பட்டது), (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.2 முகவரி (தனிப்பட்டது), (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.3 முகவரி (அலுவலகம்), (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.4 முகவரி (அலுவலகம்), (சிங்களத்தில்/தமிழில்) :----.

(அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவை/கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர் அவர் பணியாற்றும் நிறுவனத்தின் முகவரியை அலுவலக முகவரியாக குறிப்பிடுதல் வேண்டும். முகவரியில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டால் அது உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும்.)

3. 3.1 பிறந்த திகதி:

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.2 விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது:

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

5. பால்: ஆண்/பெண்:----.

6. தகைமைகள்:----.
(வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 4 இன் கீழ் உள்ள தகைமைகள்)

* கல்வித் தகைமைகள்/தொழில்சார்/தகைமைகள்:----.

* அனுபவம்:----.

7. பரீட்சைக் கட்டணக் கொடுப்பனவுப் பற்றுச்சீட்டு பற்றிய விபரம்.

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம்:----.
(ii) பற்றுச் சீட்டு இலக்கமும் திகதியும் :----.
(iii) செலுத்திய தொகை:----.

| பற்றுச்சீட்டை இங்கே கழராதவாறு ஒட்டவும் ரூபா 500 |
|---|

8. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானதும், சரியானதும் என கௌரவமாக வெளிப்படுத்துகின்றேன். இதில் உள்ள ஏதேனும் விபரங்கள் பிழையானது அல்லது தவறானது என தெரிவுசெய்வதற்கு முன் கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பம் இரத்தாக்கப்படும் என்றும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்,

திகதி:----.

9. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இந்த விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் திரு/திருமதி/செல்வி ............................. என்பவரை தனிப்பட்ட முறையில் நான் நன்கறிவேன் என்றும், அவர் தனது கையொப்பத்தினை ...................... ஆந் திகதி என் முன்னிலையில் வைத்துள்ளார் என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

முழுப்பெயர்:---.
பதவி:----.
முகவரி:----.

10. **திணைக்கள /நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**
(அமைச்சு, மாகாண அரசாங்க சேவையில் பணிபுரிபவர்களுக்கு மாத்திரம்)

இந்த விண்ணப்பதாரி திரு/திருமதி/செல்வி .................................... இந்தத் திணைக்களத்தில்/மாகாண சபையில் /நிறுவனத்தில் ................... ஆம் திகதியிலிருந்து பணியாற்றுகின்றார். அவர் நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையவருமான/தற்காலிகமான பதவியினை வகிக்கின்றார். அவர் கடந்த .................... வருட காலப் பகுதியினுள் அனைத்து சம்பள ஏற்றங்களையும் உழைத்துப் பெற்றுள்ளார் என்றும் அவர் ஒழுக்காற்று தண்டனைகள் (எச்சரிக்கை தவிர) எவற்றுக்கும் ஆளாகவில்லை என்றும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விபரங்களும் இவ் அலுவலகத்தில் உள்ள பதிவேடுகளில் இருந்து பரீட்சித்து பார்க்கப்பட்டதென்றும் அதன்படி அவ்விபரங்கள் சரியானவை என்றும், அவர் இப் பதவிக்காக தெரிவுசெய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்றும் .......... ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களம்/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர்:----.
பதவிப் பெயர்:----.
திணைக்களம்/நிறுவனம் :----.
(உத்தியோகபூர்வ இலச்சினை இடப்பட வேண்டும்.)
திகதி:----.

10-421

## திருத்தம்

### இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு II தரம் II இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013

*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 11 ஆந் திகதிய 1793 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) இன் "பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்" பிரிவின்கீழ் மேற்படி தலைப்புடன் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் 35 ஆவது பக்கத்தின் 2 ஆவது பிரிவின்கீழ் "வெற்றிட பதவிகள் தொடர்பான தகவல்" இன்கீழ் குறிப்பிடப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை பின்வருமாறு திருத்தப்படல் வேண்டும் :-*

| இல. | திணைக்களம் | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | குறியீடு |
|---|---|---|---|---|
| 1. | தேசிய மிருகக் காட்சிச்சாலைத் திணைக்களம் | உதவிப் பணிப்பாளர் | 06 | 011 |
| 2. | அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம் | அரசாங்க உதவி சந்தேகத்திற் கிடமான ஆவண பகுப்பாய்வாளர் | 03 | 022 |
| 3. | சுகாதார சேவைகள் திணைக்களம் | உடற் கூற்றியலாளர் | 15 | 092 |
| | | மருந்து பகுப்பாய்வாளர் (இரசாயனம்) | 02 | 093 |
| | | பிராந்திய மலேரியா ஒழிப்பு அலுவலர் | 03 | 099 |
| | | இரசாயனவியலாளர் | 01 | 910 |

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

பீ. பி. அபேகோன்,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

10-613

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.